வணிகக்கல்வி

போக்குவரத்தும் வழங்கல் சேவையும்



e தக்சலாவ கல்விக்கூடம் ™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சிமட்டம் - 10.3.1 :- வணிகங்களின் வெற்றிக்கு களஞ்சியப்படுத்தலை பயனுறியாகப் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தேடியறிவர்.

களஞ்சியப்படுத்தல் Ware Housing

பொருட்களின் தொகையொன்றைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அல்லது உற்பத்தி செய்த சந்தர்ப்பத்திலிருந்து அவற்றைச் சந்தைப்படுத்தும் வரையில் அல்லது நுகர்விற்கு எடுக்கும் வரையில் அல்லது விநியோகிக்கும் வரையில் பாதுகாப்பாக வைத்திருக்கும் அல்லது நீண்டகாலம் வைத்திருக்கும் செயன்முறை களஞ்சியப்படுத்தல் எனப்படும்.

இச்செயன்முறையானது

1. இருப்புக்கள் கிடைக்கப்பெறல் (Receipt)
2. இனங் காணல் (Identification)
3. பரீட்சித்தல் (Infection)
4. சரியானது என உறுதிப்படுத்திக் கொள்ளல் (Verification)
5. தரத்தினைப் பாதுகாத்தல் (Insuring Quality)
6. அகற்றுதல் (Putting Away)
7. வழங்குவதற்காக மீளப்பெற்றுக் கொள்ளல்.

என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

களஞ்சியசாலை Ware House

இருப்புக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு அல்லது நீண்டகாலம் வைத்திருப்பதற்காகப் பயன்படுத்தப்படும் இடம் களஞ்சியசாலை எனப்படும்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

களஞ்சியசாலையை நிறுவும்பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

நுகர்வோன் தொடர்பானது

- உள் நாட்டு நுகர் வோனாயின் அவர் களுக் கு இலகுவாக வி நி யோ கி க் க க் கூடிய இடமொன்றாக இருத்தல் வேண்டும்.
- வெளிநாட்டு நுகர் வோனாயின் துறைமுகம், வி மா ன நி லை ய ம் என் பவற் றிற் கு அண்மித்த இடமொன்று பொருத்தமானதாகும்.

1. **கட்டடத்தின் அமைப்புத் திட்டமும் / கட்டடத்தினுள் நகர்த்துவதற்கான வசதிகளும் (Layout and flow of the building)**
2. **பொருட்களின் பயன்பாட்டின் வேகத்திற்கேற்ப களஞ்சியசாலையினுள் வளங்களை ஒதுக்குவதற்கான தேவை.**
3. **பிரதான தொடர்புகளுக்கு அண்மித்ததாக இருத்தல்.**
4. **பண்டங்களை இடத்திற்கிடம் மாற்றக் கூடிய திறன் கொண்டதாக இருத்தல்.**
5. **களஞ்சியப்படுத்தும் பொருட்களின் தன்மை.**
6. **கிரயம்**

1. கட்டடத்தின் அமைப்புத் திட்டமும் கட்டடத்தினுள் நகர்த்துவதற்கான வசதிகளும்.

- களஞ்சியசாலைக்குப் பயன்படுத்தப்படும் கட்டடங்களின் சிறந்த அமைப்புத்திட்டம்.

  Eg: வாயில்களின் அமைவிடம், அளவு, பரப்பளவு, சாலையின் உயரம், பொருட்களைக் கையாளல் போன்றன.

- களஞ்சியசாலையினுள் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுக் கருமங்கள்.

  Eg: பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைத்தல், விநியோகித்தல், பொதிசெய்தல், விபரத்துண்டிடல் போன்றன.

- களஞ்சியசாலையினுள் பொருட்களை பொதி செய்தல் மற்றும் இடம்மாற்றுவதற்கான உபகரணங்களின் பாவனை வசதி.
- களஞ்சியசாலையினுள் மூலப்பொருட்கள் அல்லது முடிவுப் பொருட்களை கொண்டுவரும், வெளியேற்றும் வசதிகள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டே களஞ்சியசாலையை நிறுவ வேண்டும்.

Copyright www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2. பொருட்களின் பயன்பாட்டின் வேகத்திற்கேற்ப களஞ்சியசாலையினுள் வளங்களை ஒதுக்குவதற்கான தேவை.

- களஞ்சியசாலையினுள் பொருட்களைக் கையாளல், மீளப்பெற்றுக் கொள்ளல் எவ்வளவு விரைவாக இடம்பெறுகின்றது என்பதும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் கருமங்கள் எவை என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.
- களஞ்சியசாலையினுள் மேற்கொள்ளப்படும் கருமங்கள் களஞ்சியப்படுத்தி சிறிது காலம் பாதுகாப்பாக வைத்திருத்தலாயின் அல்லது எளிய பொருத்துதல் கருமமாயின் குறைந்த வேகத்தில் பொருட்களை இடத்திற்கிடம் மாற்றும் கருமத்தை மேற்கொள்ளக் கூடிய இடமாக இருத்தல் பொருத்தமானது.
- ஒரு நாளின் 24 மணித்தியாலங்களும் செயற்பாட்டுக் கருமங்கள் இடம்பெறுமாயின் மிகவேகமாகப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்குப் பொருத்தமான வசதிகளைக் கொண்ட இடம் பொருத்தமானது.
- வெளிப்படும் ஒலிகள், வெளியேற்றப்படும் பொருட்கள் மற்றும் திறந்தவெளியில் களஞ்சியப்படுத்தலின் தேவைப்பாடு போன்ற விடயங்களையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

3. பிரதான தொடர்புகளுக்கு அண்மித்ததாக இருத்தல்.

- களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் பிரதானமான போக்குவரத்து முறையை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

  Eg:புகையிரத வழியா, ஆகாய வழியா, நீர் வழியா என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.
- அதிவேக வீதியிலிருந்து விலகுவதற்கு அல்லது விமான நிலையத்தை மிக விரைவாக அடைந்து கொள்வதற்குப் பொருத்தமான இடமாக இருத்தல் வேண்டும்.
- உற்பத்தியில் அதிகளவு பகுதி ஏற்றுமதி செய்யப்பட்டு எஞ்சியது நாட்டினுள் சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகிக்கப்படுமாயின் துறைமுகம், அதிவேக வீதி, புகையிரத வீதி என்பவற்றை இலகுவாகச் சென்றடையக் கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.
- பொருட்களின் கிரயத்தில் போக்குவரத்துச் செலவு உள்ளடக்கப்படுவதால் மூலப் பொருட்கள் அல்லது முடிவுப் .பொருட்களின் போக்குவரத்திற்காக ஏற்கவேண்டிய செலவுகள் தொடர்பில் கவனம் செலுத்தி இடத்தினை தீர்மானிக்க வேண்டும்.

4. பண்டங்களை இடத்திற்கிடம் மாற்றக் கூடிய திறன் கொண்டதாக இருத்தல்.

- பொருட்களின் விநியோகம் மிகவும் வேகமாக இடம்பெற வேண்டுமாயின் பொருட்களை இடத்திற்கிடம் கொண்டு செல்லும் ட்ரக் வண்டி, பொருட்களைத் தூக்கும் உபகரணங்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமானவாறு பொருட்களை ஏற்றுதல் இறக்குதல் என்பவைகளுக்கான மேடைகளுடன் கூடிய இடம் தேவையானதாகும்.

Copyright

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

5. களஞ்சியப்படுத்தும் பொருட்களின் தன்மை.

- பொருட்களின் தன்மைக்கமைய களஞ்சியசாலையினை அமைக்க வேண்டும்.

  Eg: வெடிபொருட்கள், தீப்பற்றக்கூடிய பொருட்கள், உணவுப் பொருட்கள், மிக விரைவாக பழுதடையக் கூடிய பொருட்கள், இரசாயனப் பொருட்கள் என்றவாறு களஞ்சியப்படுத்தல் இடம்பெற வேண்டும்.

- சூழல் காரணிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

  Eg: குறிப்பிட்ட வெப்பநிலை, ஈரப்பதன், மழை என்பவைகளினால் பாதிப்புக்கள் ஏற்படாத வகையிலும் களஞ்சியம் அமைத்தல் வேண்டும்.

குறிப்பு:

களஞ்சியப்படுத்தும் பொருளானது விரைவாகத் தீப்பற்றக் கூடிய பொருட்களாயின் நீர்நிலை அல்லது நீரினை விரைவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் அண்மித்ததாகக் காணப்படுகின்றதா? என்பதைக் கவனத்தில் கொள்ளல்.

6. கிரயம்.

- களஞ்சியசாலையினை நிறுவும் போது போக்குவரத்துக் கிரயத்தையும் ஏனைய கிரயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- தொழிற்சாலைக்கு மூலப்பொருட்களைக் கொண்டுவருவதற்கான கிரயம் முடிவுப்பொருட்களை இறுதி நுகர்வோருக்கு விநியோகிக்கும் வரையில் ஏற்படும் போக்குவரத்துக் கட்டணம், ஏற்றி இறக்கல் கட்டணம் என்பவற்றை உள்ளடக்கியதாக போக்குவரத்துக் கிரயம் காணப்படும்.

- ஏனைய கிரயங்களாக

  - களஞ்சிய வாடகை
  - பிணைவைப்பு
  - காப்புறுதிக் கட்டணம்.
  - வாகனத்தரிப்பிடத்திறகான செலவு என்பவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

Copyright

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk